

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024–25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.03.2025) கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் கொடியேற்றி தொடங்கி வைத்து, ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்) மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி அலுவலர்கள் – பணியாளர்கள் – மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும்

# 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 11-

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.03.2025) கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் கொடியேற்றி தொடங்கி வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் , கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற தொடக்க விழா நிகழ்ச்சியில் மாநகராட்சியின் கொடியினை ஏற்றி வைத்து, விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பினைப் பார்வையிட்டு, ஒலிம்பிக் தீபத்தினை ஏற்றி வைத்தார். பின்னர், வண்ண பலூன்களையும், புறாக்களையும் அமைச்சர் வானில் பறக்க விட்டார். தொடர்ந்து, அமைச்சர் அவர்களின் முன்னிலையில் அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

நேற்று (10.03.2025) கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் போட்டிகள் இன்று முதல் 25.03.2025 வரை நடைபெற உள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களில் 1,756 ஆண்கள், 586 பெண்கள் என 2,342 நபர்கள், 74 மாமன்ற உறுப்பினர்கள் என மொத்தம் 2,416 நபர்கள் பங்கேற்கின்றனர்.

ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் 11.03.2025 இன்று கேரம் (Carrom) மற்றும் 12.03.2025 அன்று சதுரங்க ஆட்டம் (Chess), பூந்தமல்லி நெடுஞ்சாலை-நேரு பூங்காவில் 13.03.2025 அன்று கால் பந்து (Football), கண்ணப்பர்விளையாட்டுத்திடலில் 14.03.2025 அன்று டென்னிகாய்ட் (Tennikoit), எறி பந்து (Throw ball), கோ-கோ (Kho-Kho), மந்தைவெளி-அல்போன்சா விளையாட்டுத் திடலில் 15.03.2025 அன்று டேபிள் டென்னிஸ், கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் 17.03.2025 அன்று கைப் பந்து மற்றும் கபடி போட்டிகள், வியாசர்பாடி-முல்லை நகர்-இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கில் 18.03.2025 அன்று இறகுப் பந்து (Shuttle Badminton), பூந்தமல்லி நேரு பூங்காவில் 19.03.2025 மற்றும் 20.03.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு தடகளப் போட்டிகள், கயிறு இழுத்தல் மற்றும் Lucky Corner போட்டிகள், மைலேடிஸ் நீச்சல் குளத்தில் 22.03.2025 அன்று நீச்சல் போட்டி, கண்ணப்பர் விளையாட்டுத் திடலிலும், செனாய் நகர்-கிரெசன்ட் விளையாட்டுத் திடலிலும் 24.03.2025 மற்றும் 25.03.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீ இராஜேஸ்வரி, கே.பி. சொக்கலிங்கம், அ. தீர்த்தி, மு. சரவணன், பரிதி இளம் சுருதி, ப.சுப்பிரமணி, சி. துர்கா தேவி, பா.வேளாங் கண்ணி, மோ. சரஸ்வதி உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் யானை தாக்கி உயிரிழந்த விஜயகுமார் என்பவரின் குடும்பத்தாரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் அனுதாபத்தை தெரிவித்த அரசின் தலைமைக் கொறாடா கா.ராமச்சந்திரன், அரசின் நிவாரணத் தொகையை வழங்கினார்.

### நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில்

# யானை தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு அரசு நிவாரணம்!

## தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, மார்ச் 11-

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஆடர்லி சேம்பக்கரை பகுதியில் வசித்து வரும் குரும்பர் இனத்தைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 33), நேற்று முன்தினம் (9.3.2025) இரவு சுமார் 8.45 மணி அளவில் ஆர்டர்லி பேருந்தில் இருந்து இறங்கி வீட்டிற்கு நடந்து செல்லும் வழியில் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

செய்தியினை கேள்விப்பட்ட குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு அரசின் தலைமை கொறடாவுமான கா.ராமச்சந்திரன் குன்னூர் லாலி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று இறந்தவரின் உடலுக்கு மரியாதை செலுத்தி, இறந்தவரின் குடும்பத்திற்கு தமிழ்நாடு முதல் அமைச்சர் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் தற்போது நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் வன விலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தவர் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் வழங்கப்படுகிறது.

இன்று இறுதி சடங்கிற்கு முன்பணமாக ரூபாய் 50 ஆயிரத்திற்கான தொகையினை குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் தலைமை அரசு கொறடா கா. ராமச்சந்திரன் வனத்துறை அதிகாரிகள் முன்னிலையில் இறந்தவர் குடும்பத்தினருக்கு வழங்கினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் மீதித் தொகை விசாரணை முடிந்த பிறகு வழங்கப்படும். வனத்துறை அதிகாரிகள் இறந்தவரின் உடலை பாதுகாப்பாக அவரது கிராமத்திற்கு எடுத்துச் சென்று இறுதிச் சடங்குகள் முடியும் வரையில் இருந்து திரும்புவார்கள் என தெரிவித்தார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமை !டி.ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் எ.வ.வேலு, ஜெகத்ரட்சகன் எம்.பி, ஆர்.எஸ்.பாரதி முன்னிலை!

# பம்மல் வே.கருணாநிதி இல்லத் திருமண விழா ! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து !

## அமைச்சர்கள்–கழக முன்னணியினர் வாழ்த்து!

காஞ்சிபுரம் மார்ச்:11

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளரும் தாம்பரம் 1மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி- சரோஜா ஆகியோரின் மகன் வே.க.தன்ராஜ் கும் திருவண்ணாமலை மாவட்டம்,வி.தீன தயாளன்-லட்சுமி ஆகியோரின் மகள் தி. சசிகலாவுக்கும் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று ( 11. 3.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6:00 மணி அளவிலும் மணவிழா 12.3.2025 புதன்கிழமை காலை 9 மணிக்கு மேல் அருள்மிகு முருகன் டவர்ஸ் 200 அடி ரேடியல் சாலை பழைய பல்லாவரத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி. ஆர்.பாலு எம்.பி, அமைச்சர் எ.வ.வேலு, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி,கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணவிழாவில் தமிழ்நாடு துணை முதல்வர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.



மேலும் அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன்,ஆவடி சாமு. நாசர்,கோவி.செழியன், சி.வெ.கணேசன், கயல்விழி செல்வராஜ், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி,கழகத் தீர்மானக் குழுச் செயலாளர் மீ.ஆ. வைத்திலிங்கம்,டி.எம். செல்வகணபதி எம்.பி, க.செல்வம் எம்.பி, தரணிவேந்தன் எம்.பி, இ. கருணாநிதி எம்.எல்.ஏ,எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம். எல்.ஏ,அரவிந்த் ரமேஷ் எம். எல்.ஏ,ஓ. ஜோதி எம்.எல்.ஏ, அம்பேத்குமார் எம். எல்.ஏ,மு.பெ.கிரி எம். எல்.ஏ,த.துரைசாமி, து. மூர்த்தி, வெ. விஸ்வநாதன்,படப்பை மனோகரன்,மேயர் க. வசந்தகுமாரி,துணை மேயர் கோ.காமராஜ், க.லோகநாதன்,ரத்னா லோகேஸ்வரன் உள்ளிட்ட மாநில, மாவட்ட,பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### வழக்கறிஞர் வி.கார்த்திக் தலைமை! எஸ்.மதன்மோகன் முன்னிலை!

# சேப்பாக்கத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா - மாபெரும் பொதுக்கூட்டம்!

## தயாநிதி மாறன் எம்.பி.,- மு.க.தமிழரசு – நே.சிற்றரசு –ஆடுதுறை உத்திராபதி – ஜெயகுமரேஷ் சிறப்புரை!

சென்னை, மார்ச் 11

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பக்கம் பகுதி மாணவர் அணி சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் மு.கஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (12.3.2025 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு ஜானி ஜான்கான் ரோடு, மாணிக்கம் மேஸ்திரி தெருவில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பகுதி மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் வி.கார்த்திக் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத்தலைவர் எஸ். மதன் மோகன், 115வது வட்டச் செயலாளர் ஜி. வெங்கடேசன் என்கிற கழக ஜி.வி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

துபாய் வி.ஆர்.விஜய், ஈஸ்வரி வெங்கடேசன், எம். சபரி, ஆர்.நரேன்ஷா ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஆடுதுறை உத்திராபதி, ஜெயகுமரேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக் கூட்டத்தில் ஆர். ஜெகதீசன், கே.மகேஷ், பி.பிரபாகரன், எம்.சின்னராஜ், கே.கோபி, அ.தமீம் அன்சாரி, பி.பாலசந்தர், ஆர்.ராஜராஜன், மிக்ஸி கே.அலீப், எம்.சி.பி.இளையராஜா, எஸ்.கே.ராஜ், மல்லிகாபீ, பா.சிதம்பரம், எம். ராஜகாந்தம், பி.ராஜேஷ், எஸ்.எச்.ரஹ்மத்துல்லா, பி.கதிரவன், கே.சங்கர், ராஜன், வனமேணி, ராஜா,டி.அசோக்குமார், விடியோ டி.வினோத், ஆர். முருகன், ஏ.வேல்முருகன், ஜி.செல்வகுமார், ஜெ.அரசு, அப்பாஸ் அலி,சாம்சன், கண்ணன், மீர்மீஷாக் அலி,குட்டி, ஜி.வி.பாலாஜி, ஆர்.மனோஜ்குமார், முகமதுசுபேர், ஆர்.கௌதம், ஆகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பி.திவாகர், ஜி.பி.பாலசுப்பிரமணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாகரிக மற்றவர்கள் , ஜனநாயக விரோதிகள் என்ற இழிவாக பேசிய ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து சென்னை வடக்கு மாவட்ட திமுக சார்பில் சென்னை வியாசர்பாடி, அம்பேத்கர் கல்லூரி அருகில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில் போராட்டம் நடைபெற்றது. இதில் 200 க்கும் மேற்பட்ட திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி நடைபெற்றது இதில் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் நாளை மார்ச் 12 கழகத் தலைவர் தலைமையில் திருவள்ளூரில் நடைபெறும் மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் ஒன்றிய சார்பில் கலந்து கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் நிர்வாகிகள் பலர் உள்ளனர்

### ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# விருதுநகரில் முதல்வர் 72வது பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். - தங்கம் தென்னரசு - நாஞ்சில் சம்பத் சிறப்புரை! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. - மருதூர் ராமலிங்கம் தலைமை!

விருதுநகர், மார்ச் 11-

விருதுநகர் தெற்கு, விருதுநகர் வடக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் 9ம் தேதியன்று காலை 10 மணிக்கு விருதுநகர் எஸ்.எஸ்.கே. சரஸ்வதி மகாலில் தமிழக முதல்வர் கழகத் தலைவரின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்து கருத்தரங்கம் நடைபெற்றது.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம் மாநில ஆதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் மாநில ஆதிராவிடர்நலக் குழு துணைச் செயலாளர் மயிலை தசரதன், மு. பரமானந்தம், மாநில எஸ். சி. எஸ்.டி. ஆணைய உறுப்பினர் ஊட்டி பொன் கோஸ், முன்னாள் எம். எல்.ஏ. செ.புஷ்பராஜ், மாநில துணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுமுகம் மாநில இணை செயலாளர், பி.துரைசாமி, கரூர் ராஜேந்திரன், கொ.இரமேஷ் ஆகியோர் முன்னிலையில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. ஆதிதிராவிட நலத் துறை அமைச்சரும் மாநில ஆதிதிராவிடர்நலக்குழு துணை தலைவர் மருத்துவர் மதிவேந்தன், நாஞ்சில் சம்பத் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

எம்.எல்.ஏ.க்கள் காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம், தாயகம்கவி, ஏ.ஆர். ஆர்.சீனிவாசன், எஸ். தங்கபாண்டியன் சே.முருகேசன், மற்றும் சீர்மரபினர் வாரிய துணை தலைவர் இராஜா அருண்மொழி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில ஆதிதிராவிட நலக்குழு இணைச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. வி.பி.ராஜன், மாநில ஆதிராவிடர் நலகுழு துணை செயலாளர் முன்னாள் எம். எல்.ஏ. மானாமதுரை நகர் மன்ற தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் செய்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதி சார்பில் பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில் பகுதி செயலாளர் செ. தமிழ் வேந்தன் தலைமையில் தமிழர்களையும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவமதித்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து போராட்டம் நடைபெற்றது. இதில் பரிமளா சுரேஷ் பாபு, எஸ்.புஷ்பராஜ், எம்.இசட்.அபோய், மா. ருத்ரமூர்த்தி, மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமானப்படுத்திய ஒன்றிய கல்வி அமைச்சரை கண்டித்து ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஆலந்தூர்.ப.குணாளன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மற்றும் பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டார்கள்.